சுற்றுநிருபம் : **18/2010**

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வட மாகாணம்
22.04.2010

வட மாகாணத்திலுள்ள
அனைத்து கூட்டுறவுச் சங்க தலைவர்களுக்கும்

## கூட்டுறவு ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படி செலுத்துதல்

கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு எமது 11/2008 இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் வாழ்க்கைச் செலவுப்படியாக தற்போது மாதாந்தம் ரூபா 2875/= வழங்கப்பட்டு வருகின்றது. இதனை 01.01.2010ம் திகதியிலிருந்து மாதாந்தம் ரூபா 5250/= ஆக கீழ்வரும் நிபந்தனைகளுக்கமைய வழங்குவதற்கு வட மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

1. கிராமிய வங்கியின் இலாபத்தினைத் தவிர்த்து, சங்கம் சுயமுயற்சியால் இலாபம் ஈட்டுமாயின் சங்கத்தின் அனைத்து நிரந்தர ஊழியர்களுக்கும் மாதாந்தம் ரூபா 5250/= 01.01.2010 இலிருந்து வழங்குதல் வேண்டும்.

2. தற்காலிக, நாளாந்த அடிப்படையிலான ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவுப்படியை வழங்கும் போது அவர்கள் வேலை செய்த நாட்களின் அடிப்படையில் 01.01.2010 இலிருந்து நாளொன்றுக்கு ரூபா 175/= படி மாதமொன்றிற்கு ரூபா 5250/= என்ற வரையறைக்கு உட்பட்டும் கணிப்பீடு செய்து செலுத்தப்பட வேண்டும்.

3. மேற்குறிப்பிடப்படும் திகதியிலிருந்து வாழ்க்கைச் செலவுப்படியை வழங்குவதற்கு சங்கங்களினால் ஈட்டப்பட்ட இலாபம் போதுமானதாக இல்லாது விடின் கொடுப்பனவுகள் வழங்கப்படலாகாது என்பதை சங்கங்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

இச்சுற்றுநிருபம் வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

2010.04.21 ந் திகதிய ஆணைக்குழு பணிப்பின்படி.

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வட மாகாணம்

P. VAGESHAN
Secretary
Co-operative Employees Commissior
Northern Province

பிரதி :

01. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும், வட மாகாணம்
02. வட மாகாணத்திலுள்ள சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்.
03. வட மாகாணத்திலுள்ள அனைத்து கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கங்களுக்கும்